**தலைப்பு 103 - பாதுகாப்பு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 103 - பாதுகாப்பு அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாதுகாப்பு அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வாடகை மற்றும் வேலை முற்பணங்களை கணக்கீடு செய்தல்**

2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 250/2016(i) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் அரசாங்கத்தின் அலுவலக கட்டிடங்களை வாடகை அடிப்படையில் வழங்கும் போதும் வேலை ஒப்பந்தங்களுக்காக முற்பணங்களைச் செலுத்தும் போதும் அது சம்பந்தமாக பின்பற்றப்பட வேண்டிய முறைமை அறிமுக்கப்படுத்தப்பட்டிருந்தும் அமைச்சினால் அந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 40 செயற்பாடுகள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதிக்குப் பிந்திய காலப்பகுதி தொடர்பாக செலுத்திய ரூபா 580,498,346 தொகையான வேலை முற்பணங்கள் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் மேற்கூறிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் ஒதுக்க | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்படுகின்ற முற்பணங்கள் செலவாக செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதுடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ள அரசாங்க நிதி சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை | அரசாங்கத்தின் அலுவலகங்களுக்காக கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் போதும் வேலை ஒப்பந்தங்களுக்காகக முற்பணங்களைச் செலுத்தும் போதும் 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 250/2016(i) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | எடுத்தல் வேண்டும். |
| (ii) | மூன்று சந்தர்ப்பங்களின் போது அலுவலக கட்டிடங்களின் வாடகை முற்பணமாக மொத்தமாக ரூபா 18,800,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த முற்பணங்களைச் செலுத்துதல், வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் ஒதுக்க கணக்கு ஆகிய கணக்குகளின் மூலம் வெளிக்காட்டடிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படுகின்ற முற்பணங்கள் சம்பந்தமாக 250/2016(i) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2016 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய 250/2016(i) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (iii) | இடர் முகாமைத்துவ பிரிவினால் ஒரு வெளி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,414,510 தொகையான வேலை முற்பணங்கள் செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு மற்றும் வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்க கணக்கின் மூலம் கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினூடாக வாடகை மற்றும் வேலை முற்பணக் கணக்கு மற்றும் வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்க கணக்கினைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | 2016 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய 250/2016(i) ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (iv) | வேலை ஒப்பந்த முற்பணங்கள் மற்றும் அலுவலக கட்டிட வாடகை முற்பணைங்களைச் செலுத்தும் போது கொடுப்பனவு செய்யப்படுகின்ற ஆண்டில் ஒரு செலவாக கணக்கீடு செய்வதன் காரணமாகவும் வேலை முற்பணமாக சிகாஸ் முறைமையில் கணக்கீடு செய்யாமையின் காரணமாகவும் குடியரசுக் கணக்கில் அரசாங்கத்திற்கு உள்ள உரிமை முறைப்படியாக வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினூடாக வாடகை மற்றும் வேலை முற்பணங்கள் கணக்கினைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஏதாவது ஒரு திகதியில் குடியரசுக் கணக்கின் அரசாங்கத்திற்கு உள்ள உரிமையை முறைப்படியாக வெளிக்காட்டும் வகையில் கணக்கு பேணப்படுதல் வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

04/2018 ஆம் இலக்க 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் அதில் குறிப்பிட்ட வழிகாட்டியின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழ் நிதியளிக்கப்படுகின்ற ஏனைய நிறுவனங்களினால் பயன்படுத்துகின்ற காணிகளுக்கு மத்தியில் கணக்கு வைக்கப்பட்டிருந்ததானது தேசிய பாதுகாப்பு கல்லூரி அமைந்துள்ள காணியின் பெறுமதி மாத்திரமானதுடன் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் மூலம் நிதியளிக்கப்படுகின்ற ஏனைய நிறுவனங்களால் பயன்படுத்துகின்ற காணிகளை அடையாளங்காணல், பெறுமதியை மதிப்பீடு செய்தல் அல்லது கணக்கீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை என பின்வரும் விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதனால் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரியான காணிகளின் பெறுமதி வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி அமைந்திருந்த 21.0437 ஹெக்டயர் அளவான காணியை மதிப்பீடு செய்யும் நடவடிக்கை மீளாய்வாண்டில் தாமதமடைந்ததன் காரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2012 பெப்ரவரி 15 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி அமைந்துள்ள 21.0437 ஹெக்டயர் காணியை மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக மதிப்பீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் திட்டவரைபடம் சம்பந்தமாக காணப்படுகின்ற சிக்கலை தீர்த்துவைத்து மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யும் இயலுமை காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சரியாக காணியை அடையாளம் காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தேசிய பயிலுனர் படையணியினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் பயிலுனர்களினால் பயன்படுத்துகின்ற 35 காணிப் | கணக்கீடு செய்யப்படாத ரூபா 55,590,000 பெறுமதியை சரியாக அடையாளங்கண்டு 03 | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து சரியாக காணியை அடையாளங்கண்டு, |

| | | | |
|---|---|---|---|
| | பகுதிகள் காணப்படுகின்றது எனவும் அவற்றில் 04 பகுதிகளின் உரிமை தேசிய பயிலுனர் படையணியிடம் காணப்படுகின்றது எனவும் மிகுதியான 31 காணிப் பகுதிகளின் உரிமை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. இவற்றில் ஒரு காணி 2021-12-31 ஆந் திகதி ரூபா 55,590,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அக்காணியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மாதங்களுக்குள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. | மதிப்பீடு செய்து மற்றும் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதியற்ற சொத்துக்கள் கூற்று SA 82 படிவத்தின் பிரகாரம் அமைச்சின் அலுவலக கட்டிடங்களின் பெறுமதி ரூபா 128,180,762 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அதனுள் 2021 யூன் வரை அமைச்சு செயற்பட்டு வந்து கைதவிர்ப்புச் செய்யப்பட்ட ஒரு கட்டிடத்தின் பெறுமதியான ரூபா 5,669,621 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கட்டிடங்களின் பெறுமதி ரூபா 5,669,621 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பழைய அமைச்சுக் கட்டிடத்தின் பெறுமதியை CIGAS நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து நீக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கைதவிர்ப்புச் செய்யப்பட்ட கட்டிடத்தின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்து CIGAS முறைமையை நாளதுவரையாக்குதல் வேண்டும். |
| (iv) | பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவுகளின் மூலம் காட்டப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் மற்றும் நடைமுறை வேலைகளின் கிரயம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் SA 82 - நிதியற்ற சொத்துக்கள் அறிக்கையின் | செயற்திட்ட சொத்துக்களை முறைப்படியாக அடையாளங்கண்டு மதிப்பீடு செய்ததன் பின்னர் மூலதன மாக்குவதற்காக நடவடிக்கை எடுத்தலின் கீழ் அரசாங்க பாதீட்டு திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டிற்காக | பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மூலதன செலவுகளின் கீழ் மூலதன சொத்துக்களைச் சவீகரித்தல் மற்றும் நடைமுறை வேலைகளின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | மூலம் வெளிக்காட்டப்பட்டிருந்தும் முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் பாதுகாப்பு தலைமையக நிர்மாண செயற்திட்டத்தின் மூலதன செலவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூலதன சொத்துக்களை சுவீகரித்தல் (9152-61122- ஏனைய இயந்திர உபகரணங்கள்) ரூபா 356,911,375 மற்றும் நடைமுறை வேலைகளின் கிரயம் (9160-61114) ரூபா 13,466,415,615 நிதிக் கூற்றுக்களில் SA 82 நிதியற்ற சொத்துக்களின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கிய 103-1-2-7-2509 செலவு விடயத்தின் கீழ் செலவுகளை அறிக்கையிடுதல் இடம்பெற்றுள்ளது என தெரியப்படுத்தப்பட்டது. | மூலம் வெளிப்படுத்தப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பாக SA 82 சொத்துக்கள் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள 06 கட்டிடங்களின் பெறுமதிக்கும் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் காட்டப்படுகின்ற அந்த 06 கட்டிடங்களின் பெறுமதிக்குமிடையே ரூபா 1,528,485,726 வித்தியாசம் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | SA 82 அறிக்கையில் காட்டப்படுவதாவது 2021-12-31 ஆந் திகதி வரை அடையாளங்காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மாத்திரமாகும். எனினும் கொம்டப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தினால் (CECB) வழங்கப்பட்ட விபரங்களின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கிரயத்தினை உறுதியாக கணிப்பீடு செய்வதற்காக ஒரு சபை நியமிக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் | கட்டிட கிரயத்தினை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியதுடன் சொத்துக்கள் முகாமைத்துவ தேவைப்பாட்டிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையும் அதனை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | |
| (vi) | நிதிக்கூற்றுக்களுக்கு இணங்கவும் திறைசேரியின் SA 82 படிவத்திற்கு இணங்கவும் (9151) கட்டிடங்கள், (9160), நடைமுறை வேலைகளும் கட்டமைப்பும், (9152) இயந்திரங்கள் ஆகிய நிதியற்ற சொத்துக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தப் பெறுமதி ரூபா 2,038,539,555 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஏடுகளின் பிரகாரம் மொத்தப் பெறுமதி ரூபா 10,618,850,752 ஆக இருந்ததனால் ரூபா 8,580,311,197 வித்தியாசம் காணப்பட்டது. அதற்கிணங்க திறைசேரி ஏடுகளும் அமைச்சின் ஏடுகளும் ஒன்றுக்கொன்று இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் போது இச்சொத்துக்களின் மீதி தொடர்பாக பேரேட்டு மீதிகளில் சரிசெய்தல் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | திறைசேரி ஏடுகளும் அமைச்சின் ஏடுகளும் ஒன்றுக்கொன்று இணங்கியிருக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (vii) | 2022 செப்தெம்பர் 15 ஆந் திகதி நடைபெற்ற விசேட மீளாய்வுச் சபையின் மூலம் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டியது என அடையாளங்காணப்பட்டிருந்த கிரயம் ரூபா 10,800,000 ஆன 06 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது இராணுவப் படைக்கும் கடற்படைக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தும் அக்கிரயம் கணக்குகளிலிருந்து நீக்கப்படாமையின் காரணமாக அத்தொகையால் நிதிக்கூற்றுக்களில் வாகனங்களின் பெறுமதி அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இராணுவப் படைக்கும் கடற்படைக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள ரூபா 10,800,000 கிரயமான 06 வாகனங்கள் 2024 மே மாதம் கணக்கு பொழிப்புக்களின் மூலம் செம்மையாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | வாகன கைதவிர்ப்புக்கள் மற்றும் ஒப்படைப்புக்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | அமைச்சு SA 82 நிதியற்ற சொத்துக்கள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட இரண்டு குத்தகை வாகனங்களை 2023 ஆம் ஆண்டில் ஏனைய நிறுவனங்களுக்கு ஒபபடைத்திருந்தும் CIGAS சொத்துக்கள் அறிக்கையிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதியற்ற சொத்துக்கள் ரூபா 35,900,000 ஆல் அதிகரித்துச் காட்டப்பட்டிருந்தது. | இராணுவப் படை மற்றும் கடற்படைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ரூபா 35,900,000 கிரயமான 02 வாகனங்கள் மே மாத கணக்குப் பொழிப்புக்களின் மூலம் செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டது. | ஏனைய நிறுவனங்களுக்கு ஒபபடைக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி CIGAS அமைப்பில் செம்மையாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ix) | இடர் முகாமைத்துவ பிரிவினால் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மொத்தமாக ரூபா 44,866,011 பெறுமதியான 06 வாகனங்கள் இடர் முகாமைத்துவ பிரிவின் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் நிலையான சொத்துக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அந்த வாகனங்கள் 2024 ஆம் ஆண்டில் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் செம்மையாக்கி கணக்காய்விற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்குள் சொத்துக்கள் சம்பந்தமாக இடம்பெறுகின்ற அசைவுகளை தாமதமின்றி கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (x) | 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டியிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணனி மென்பொருட்களானது சொத்துக்களை சுவீகரிக்கும் செலவுக் குறியீடு இலக்கம் 2106 இன் கீழ் மென்பொருள் முறைமையை சுவீகரிக்கும் கட்புலனாகா சொத்துக்களாக 61133 குறியீட்டின் கீழ் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் அரசாங்க புலனாய்வுச் சேவைக்காக தரவு முகாமைத்துவ முறைமையை வழங்கி பொருத்துதல் மற்றும் தரவு பகுப்பாய்வு முறைமையை ஸ்தாபிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா | அரசாங்க புலனாய்வுச் சேவையின் தரவு முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதற்குரிய செலவுகள் பிழையாக 61122 - ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் 6112202 - கணனி உபகரணங்களை கொள்வனவு செய்தலாக மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் கட்புலனாகா சொத்துக்களாக அடையாளங்காணக்கூடிய பகுதியை அடுத்துவரும் ஆண்டிற்கான கணக்கு பொழிப்புக்களின் | சரியாக நிலையான சொத:தக்கள் குறியீட்டின் பிரகாரம் அடையாளங்காணப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| 119,773,179 செலவுகள் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மண்சரிவினால் வீடுகளை இழந்த மற்றும் மண்சரிவு ஏற்படும் அதிக ஆபத்தான வலயங்களில் வசிக்கும் குடும்பங்களை அந்த இடங்களிலிருந்து அகற்றி பாதுகாப்பான இடங்களில் மீண்டும் குடியிருக்கும் வகையில் ரூபா 7,245,980,034 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 18 மாவட்டங்களில் வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 3,112,989,366 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த 13 மாவட்டங்களில் அந்த நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்துவது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சர்ப்பிக்கப்படவில்லை. | தற்பொழுது வரை சமர்ப்பிக்கப்படாத 13 மாவட்டங்களுக்குரிய தகவல்களை 2024-06-30 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இடர் முகாமைத்துவ பிரிவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 42 ஆம் பிரிவிற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாடுகளின் மூலம் ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 5,748 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 10,124 மில்லியன் வருமானம் சேமிக்கப்பட்டிருந்ததுடன் | 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 2,926 மில்லியன் வருமானம் 2023 ஆம் ஆண்டின் போது திறைசேரி கணக்கிற்குச் செலவு வைத்ததன் காரணமாக 2023 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூபா 2,926 மில்லினால் அதிகரித்திருந்தது. எனினும் இந்த | வருமான மதிப்பீட்டினை முடியுமான அளவு நடைமுறைச் சாத்தியமாக தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கிணங்க 176 சதவீத முரண்பாடு காணப்படுவதனால் வருமான மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் காட்டப்படவில்லை. எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை நடைமுறைச் சாத்தியமாகத் தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 1/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க பாதீட்டினைத் தயாரிப்பதற்காக வருடாந்த வருமானம் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்தும் தொடக்க வருமான மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 130 சதவீதத்திலிருந்து 147 சதவீதம் வரையான முரண்பாடுகள் காணப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டிற்கான திருத்திய வருமான மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையேயும் 36 சதவீதத்திலிருந்து 91 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டன. | அறவிடப்பட்ட கட்டணத்தை திருத்தம் செய்தல் வெடிபொருள் அனுமதிப்பத்திரம் மற்றும் அதிகாரப் பத்திர கட்டணத்தை அதிகரித்தல், துவக்குகள் சம்பந்தமான வருமானத்தை அதிகரித்தல், தண்டப்பணத்தை அறவீடு செய்தல், அதிகாரத்தை மாற்றுதல், 2022 ஆண்டிற்கான சமாதான வருமானம் 2023 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்தல் முதலிய காரணங்களின் அடிப்படையில் வருமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. | வருமான மதிப்பீட்டினை முடியுமான அளவு நடைமுறைச் சாத்தியமாக தயாரித்தல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டு தொடர்பாக ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டு கடமைகளுக்கான நிலுவையாக இருந்த வருமானத்தில் அமெரிக்க டொலர் 575,121 தொகை உபகரணங்களை வழங்காமையின் காரணமாக உள்ளபடியாக கிடைக்காத வருமானமாக அடையாளம் காணப்பட்டிருந்தும் அது நிதிப் பிரமாணம் 113 இன் பிரகாரம் நிலுவை வருமானத்தை பதிவழித்தலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய போதிலும் 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமானத்தினை முன்கொண்டு வரும் போது கழித்துக் | உபகரணங்களை வழங்குவதற்கு முடியாமையின் அடிப்படையில் எதிர்பார்த்த வருமானத்தினை உழைத்துக் கொள்வதற்கு முடியாமை நிலுவை வருமானமாக கருதி பதிவழிக்கும் நடைமுறையை பின்பற்றும் தேவைப்பாடு இல்லாததனால் இந்த அவதானிப்புடன் இணங்கி கொள்ளவில்லை. இது தொடர்பாக மேலும் ஆலோசனையை அரசாங்க | 2022 ஆம் ஆண்டிற்கான நிலுவை வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதனால் நிலுவை வருமானம் ஒரு பதிவழிப்பாக நிலுவை வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டியதுடன் நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. இப்பணத்தை வருமானத்திலிருந்து கைவிடுவதற்காக நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கொள்கை திணைக்களத்திடம் விசாரித்து பதிலை பின்னர் வழங்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 128(2)(எ) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்தை சேகரிக்கின்ற திணைக்களத்திடமிருந்து தேவையான தகவ்லகளைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ஒழுங்குவிதிகள் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் ஏசீஏ -1(i) படிவத்தில் காட்டப்படுகின்ற ரூபா 1,431,899,941 நிலுவை வருமானத்தினைச் சேகரிப்பது தொடர்பான மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கிணங்க நிலுவை வருமானத்தை சேகரிப்பது தொடர்பான கூற்று, அங்கீகரித்த வருமானத்தை கைவிடுவது தொடர்பான கூற்று முதலியன சமர்ப்பிக்கப்படாததனால் ஒவ்வொரு ஆண்டிற்குமான நிலுவை வருமானத்திற்கு நேரொத்ததாக சேகரிக்கப்பட்ட அளவு, நிதிப்பிரமாணம் 113 இற்கு இணங்க கைவிடப்பட்ட நிலுவை வருமானம் முதலியவற்றை உறுதியாக அடையாளங்காண முடியாதுள்ளது. | நிலுவை வருமானத்தை சேகரித்தல் தொடர்பான மற்றும் அங்கீகரித்த வருமானத்தை கைவிடுதல் கூற்றில் வருமானத்தை சேகரிக்கின்ற நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளல் இதுவரை இடம்பெற்றிருக்காததுடன் இந்த ஆண்டிலிருந்து நிலுவை வருமானத்தினை சேகரிப்பது தொடர்பான மற்றும் அங்கீகரித்த வருமானத்தை கைவிடுதல் கூற்றினை வருமானத்தை சேகரிக்கும் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 128(2)(எ) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்தை சேகரிக்கின்ற திணைக்களடமிருந்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ஒழுங்குவிதிகள் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும் |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 14 செலவு விடயங்களுக்காக ரூபா 19,230,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அந்த நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதகாப்பு அமைச்சர் சனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக செயற்படுவதன் காரணமாக அச்செலவு சனாதிபதி செயலகத்தினால் | உச்ச அளவு வினைத்திறனுடன் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளல் மற்றும் 201/2023 மற்றும் 02/2023 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் செலவு செய்தலினை மட்டுப்படுத்துதல் சேமிப்பிற்கான காரணமாகும். | |
| (ஆ) | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் 12 செலவு விடயங்கள் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வருடாந்த நிதி எற்பாடு ரூபா 61,695,000 ஆக இருந்த போதிலும் அந்த 12 செலவு விடயங்களுக்காக நிதிப் பிரணமானம் 66 இன் கிழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மேலதிக நிதி எற்பாடு ரூபா 86,747,600 ஆக இருந்ததனால் தொடக்க நிதி எற்பாட்டின் சதவீதமாக செலவுத் தலைப்புக்களுக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக நிதி ஏற்பாட்டுப் பெறுமதியை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது 108 சதவீதத்திலிருந்து 1503 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்காக வேண்டிக்கொள்ளப்பட்ட நிதி எற்பாட்டின் அளவு கிடைக்காததுடன் அங்கீகரித்த பாதீட்டின் மூலம் வழங்கிய நிதி ஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததன் காரணமாக நி.பி 66 மாற்றல்களின் கீழ் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. | உச்ச அளவு வினைத்திறனுடன் ஒவ்வொரு செலவு விடயத்திற்குமாக வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | இரண்டு செலவு விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மேலதிக நிதி ஏற்பாடு ரூபா 2,064,600 ஆக இருந்த போதிலும் அந்த நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 2,151,865 சேமிப்பு காணப்பட்டது. | நி.பி இன் பிரகாரம் ஏதாவது கடப்பாட்டினை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னர் நிதி எற்பாடு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அதற்கிணங்க உரிய 02 செலவு விடயங்கள் தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய பெறுகைகளுக்குரிய நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்காக நி.பி 66 இன் கீழ் நிதி எற்பாட்டினை மாற்றுதல் இடம்பெற்றிருந்தும் பெறுகை நடைமுறையை முடிவுறுத்தி | மாற்றிக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு உச்ச அளவு வினைத்திறனுடன் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வவுச்சர்களை சமர்பபிப்பதற்கு முடியாமையின் அடிப்படையில் அந்த நிதி எற்பாடு சேமிக்கப்பட்டது. | |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 94(2) இலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடைமுறை நிதி ஆண்டில் நிதி எற்பாடு காணப்படுகையில் அடுத்துவரும் நிதி ஆண்டிலும் அவ்வாறான செலவு எதிர்பார்க்கப்படுமாகவிருந்தால் அடுத்துவரும் ஆண்டில் தீர்த்துவைப்பதற்கு ஏற்படுகின்ற பொறுப்புக்களை மேற்கொள்ளலாம். 2024 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் கொடுப்பனவு வவுச்சர்கள் தொடர்பான தெரிவுப் பரீட்சிப்பின் போது 2023 ஆம் ஆண்டிற்காக 39 சந்தர்ப்பங்களின் போது மொத்தமாக ரூபா 3,106,817 தொகையான செலவுகள் 2024 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாட்டிலிருந்து செலவு செய்யப்பட்ட போதிலும் அந்த செலவுகள் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்களாக அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுகின்ற பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 3,106,817 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பொறுப்புக்களை சரியாக அடையாளம் காணும் சிக்கலின் அடிப்படையில் அக்கொடுப்பனவுகள் பொறுப்புக்கள் பெரேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நி.பி இன் பரகாரம் முடியுமான அளவிற்கு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை அடையாளங்கண்டு ஏடுகளில் உள்ளடக்குவதற்கு முடியுமான வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை எதிர்காலத்தில் அமுல்ப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 94(2) இலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் பொறுப்புக்களை அடையாளங்கண்டு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | | | |
| (அ) | இலங்கை கனநாயக சோசலிசக் குடிரசு நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 135 | - | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருமானங்கள் சம்பந்தமான நிதி அதிகாரத்தினை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஐக்கிய நாடுகளின் சமாதான செயற்பாட்டு வருமானம் மற்றும் அனுமதிப் பத்திர கட்டண வருமானத்திற்குரிய நிதி அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் வருமானங்கள் சம்பந்தமான நிதி அதிகாரத்தினை ஒப்படைத்தல் இன்று வரை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டிற்கான நிதி அதிகாரத்தினை ஒப்படைக்கும் போது வருமானங்களுக்கான அதிகாரத்தினை ஒப்படைப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 453(ஏ) | - | அமைச்சு மற்றும் பாதுகாப்பு சேவை ஆகிய இரண்டு பிரிவுகளின் 442 ஆளணியனர்களைத் தவிர்த்து அமைச்சினால் சம்பளம் செலுத்துகின்ற அரசாங்க உளவுச் | எதிர்காலத்தில் அராங்க உளவுச் சேவையின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் முறைப்படியாக நிருவாக அறிக்கையை பேணுவதற்கும் தேவையான நடவடிக்கை ஈடுபடுத்தப்பட்டுள் | நிதிப்பிரமாணம் 453(ஏ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து முழுமையான ஊழியர் கடப்பாடு தொடர்பான அறிக்கையை சரியாக பேணுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சேவை மற்றும் தேசிய பயிலுனர் படையணி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 2292 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அங்கீகரித்த/ உள்ளபடியான ஆளணியினர் அல்லது அதன் மாதாந்த மாற்றங்கள் தொடர்பான கட்டுப்பாட்டு அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. | ளது. | |
| (ஆ) | 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PED/RED/2015/ 8/பொது(1) ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் வழிகாட்டி கோவை இலக்கம் 01 | 5,004,395 | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்ற, மரணமடைந்த, வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையை கைவிட்டுச் சென்றுள்ள உத்தியோகத்திர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 5,004,395 ஆக இருந்ததுடன் | 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அறவிட முடியாத ரூபா 590,703 தொகையான 03 கடன் மீதிகளை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்காக அனுப்பிவைத்தல், சட்ட நடவடிக்கை எடுத்தல், கடனை தீர்த்துவைக்குமாறு இறுதியான தெரியப்படுத்தலினை மேற்கொள்ளல், ஓய்வூதிய பணிக்கொடைகளிலிருந்து அறவீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புபட்ட அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 05 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளின் மொத்தம் ரூபா 1,297,832 ஆகும். | | |
| (இ) | 2023 நவம்பர் 30 ஆந் திகதிய 05/2023 ஆம் இலக்க அரசாங்க கணக்ககள் வழிகாட்டிக் கோவையின் 8.2 ஆம் பந்தி | 3,911,702,668 | இன்னும் அறிக்கையிடப்பட வேண்டிய சொத்துக்கள் காணப்படுமாயின் அவற்றினை முறைப்படியாக அடையாளங்கண்டு கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2021 மே 17 ஆந் திகதியில் வேலை பூர்த்திசெய்யப்பட்டு தற்பொழுது அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ள 08 ஆம் இலக்க கட்டிடம் தொடர்பான கிரயம் ரூபா 3,911,702,668 ஆக கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தும் நிதிக்கூற்றுக்களில் | அச்செலவுகள் நடைமுறை வேலை கிரயத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளது. | அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் இன்னும் அறிக்யையிடப்பட வேண்டிய சொத்துக்கள் இருக்குமாயின் அவற்றை முறைப்படியாக அடையாளங்கண்டு கிரயத்தில் கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | காட்டப்படுகின்ற கட்டிடங்களின் பெறுமதியில் மேற்கூறிய 08 ஆம் இலக்க கட்டிடத்தின் கிரயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### சான்றுபடுத்தப்படாத கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 138 மற்றும் 139 இன் பிரகாரம் ஏதாவது ஒரு செலவினை மேற்கொள்வதற்கு முன்னர் வவுச்சர்களை சான்றுபடுத்தி கொடுப்பனவு செய்வதற்கு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் வவுச்சர்கள் சான்றுபடுத்தப்படாதும் கொடுப்பனவு செய்வதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அங்கீகாரம் இல்லாமலும் ரூபா 2,055,345 தொகை நலன்புரி நிதியத்தின் மூலம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செலவு பின்னர் நலன்புரி நிதியத்திற்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது என பாதுகாப்பு பதவிநிலை பிரதானி அலுவலகம் மற்றும் பயிலுனர் படையணி ஆகிய நிறுவனங்கள் சார்ந்த தெரிவுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | நி.பி 138 மற்றும் 139 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணாக மேற்கொண்டு மீளளிப்புச் செய்வதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்ற வவுச்சர்களுக்காக கொடுப்பனவு செய்யும் நடைமுறையை இதன் பின்னர் அமுல்ப்படுத்தாதிருப்பதற்கும் அனைத்து நிதிப் பிரமாணங்களையும் உள்ளடக்கும் வகையில் கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற உரிய நிறுவனங்களுக்கு நேரடியாக கொடுப்பனவு செய்வதற்கு தேவையான தெரியப்படுத்தல்களை மேற்கொள்ளல் மற்றும் அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிகிகறேன். | நிதிப்பிரமாணம் 138 மற்றும் 139 இன் பிரகாரம் வவுச்சர்களை சான்றுபடுத்துகின்ற உத்தியோகத்தர்களால் வவுச்சர்களின் முகப்பில் பெயர் குறிப்பிட்ட பணம் பெறுபவர்கள் முன்மொழியப்பட்ட கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகமையுள்ளவர்கள் என்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை மிகைக்கவில்லை எனவும் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அகொடுப்பனவு செய்வதற்கு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் வவுச்சர்கள் சரியாக சான்றுபடுத்தப்பட்டுள்ளனவா என்பதனையும் |

| | | |
|---|---|---|
| | | உறுதிப்படுத்திக்கொள்ளல், பணம் பெறுபவரின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளல் முதலியவை சம்பந்தமாக பொறுப்புக் கூறுதல் வேண்டும். |

**2.6 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்துவைத்தலும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் ஏதாவதொரு நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டிற்காக வழங்கப்படுகின்ற குறித்த செயலுக்கான உபகட்டுநிதியானது உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் கட்டுநிதியை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தரினால் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 64 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 3,648,332 முற்பணம் 25 நாட்களிலிருந்து 200 நாட்கள் வரையான கால வீச்சிலான தாமதத்துடன் தீர்த்துவைத்தல் இடம்பெற்றிருந்தது. | இது சம்பந்தமாக உரிய பிரிவுகளுக்கும் நிறுவனங்களுக்கும் மீண்டும் தெரியப்படுத்துவதற்கும் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறையை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவாக தெரிவிக்கிறேன். | தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் குறித்த செயலுக்கான உப கட்டுநிதியை உரிய செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.7 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பாதுகாப்பு அமைச்சினால் 06 பொதுவைப்புக் கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன் அக்கணக்குகளுக்கு இணங்க 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட வைப்பு மீதிகள் ரூபா 894,999,209 ஆக இருந்ததுடன் வைப்புக் காலம் 02 ஆண்டுகளிலிருந்து 07 ஆண்டுகள் வரையான மீதிகளின் மொத்தம் ரூபா 717,513,704 ஆகும். நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் | நி.பி 571 இன் பிரகாரம் காலங்கடந்த அனைத்து வைப்பக்களையும் தீர்த்துவைப்பதற்காக ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் நி.பி 570 இனல் காட்டப்பட்டுள்ளவாறு காலங்கடந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பாக | உரிய சந்தர்ப்பங்களின் போது நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் காலங்கடந்த அனைத்து வைப்புக்களையும் தீர்த்துவைப்பதற்காக தேவையான ஒரு பட்டியல் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் |

| | | |
|---|---|---|
| காலங்கடந்த அனைத்து வைப்புக்களையும் திர்த்துவைப்பதற்காக ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் நிதிப்பிரமாணம் 570 இல் காட்டப்பட்டுள்ளவாறு காலங்கடந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பான ஒரு பட்டியல் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொரு பிரிவிற்குமுரிய வைப்புக் கணக்கு சம்பந்தமாக அவ்வாறான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு பட்டியலினை இவ்வாண்டிலிருந்து (2024) தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக்கொள்ளப்பட்டது. | தயாரித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பாதுகாப்பு படை தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் நிர்மாண சேவைகள் தாமதித்தல், நாணயக் கடிதத்தினை திறப்பதில் தாமதம் முதலிய காரணங்களினால் ஒப்பந்தத்தினை பூர்த்திசெய்வதற்கு முடியாமையின் அடிப்படையில் ஒப்பந்த காலத்தினை நீடிக்க வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறான 02 வழங்கல் ஒப்பந்தங்களினால் ரூபா 837,497,744 மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 3,675,029 ஆன 19 உரிமைக் கோரல்கள் (Claims for EOT) வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் எதிர்கால நிலைத்திருத்தல் சம்பந்தமாக 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மையை உள்ளடக்கிய பல்வேறு காரணங்களின் அடிப்படையில் செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகள் மெதுவானதாக இருந்ததுடன் இத்தாமதங்களின் அடிப்படையில் ஒப்பந்தக்காரரினால் காலத்தை நீடிப்புச் செய்யும் உரிமை கோரல்கள் வேண்டிக் கொள்ளப்பட்டது. அது செயற்திட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியாத நிலைமை என சுட்டிக்காட்டுகிறேன். | சிக்கனமற்ற செலவுகள் ஏற்படுவதனை தவிர்த்துக் கொள்ளுவதற்கும் தேவையற்ற தாமதங்களை கட்டுப்படுத்துவதற்கும் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். |

## 3.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தினை பெற்றுக்கொண்டிருக்காத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய இடர்நிவாரண சேவைகள் செயற்பாடுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட மண்சரிவினால் வீடுகளை இழந்த மற்றும் மண்சரிவு ஏற்படும் அதிக ஆபத்து வலயங்களில் குடியிருக்கின்ற குடும்பங்களை அகற்றி பாதகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அரசாங்கத்தின் நிதி உதவியின் அடிப்படையில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த 205 வீடுகளுக்கு நீர் மூலங்கள் இல்லாதிருந்தமை மற்றும் 03 மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த 82 வீடுகளுக்கு மின்சார வசதிகள் இல்லாதிருந்தமையின் காரணமாக மொத்தமாக ரூபா 344,400,000 நிதி உதவி பெற்றுக்கொண்ட நலன்பெறுனர்கள் அந்த வீடுகளில் குடியிருக்கவில்லை. மேலும் மொத்தமாக ரூபா 15,900,000 பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட 17 நலன்பெறுனர்களினால் அந்த வீடுகளின் உரிமை கைவிடப்பட்டிருந்தது. | மீளக் குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்காக நீர் மற்றும் மின்சாரம் உரிய நலன்பெறுனர்களினால் வழங்க வேண்டும் எனவும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையை முன்னிட்டு மீளக் குடியமர்த்தப்படுகின்ற அனைத்து நலன் பெறுனர்களுக்கும் இவ்வாறு நீர் மற்றும் மின்சாரம் வழங்குவதற்கான இயலுமை இல்லை எனவும் குறிப்பிடுகின்றேன். நிர்மூலங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களினால் நீரினை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பாதுகாப்பான இடங்களில் நபர்களைக் குடியமர்த்தும் போது நீர், மின்சாரம் போன்ற அடிப்படைத் தேவைப்பாடுகளை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் கனாணப்படுகின்ற இடங்களில் குடியமர்த்துதல் வேண்டும். |
| (ஆ) | 05 மாவட்டங்களில் பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியமர்த்தும் மேற்கூறிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மொத்தமாக ரூபா 200,600,000 தொகையான பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட 258 நலன்பெறுனர்கள் | தவணைப் பணத்திற்குரிய நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, தவணைப் பணத்திற்குரிய நிர்மாண வேலைகளை மாத்திரம் மேற்கொண்டு வீட்டின் நிர்மாண | முறையான மேற்பார்வையுடன் செயற்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட கட்டங்களுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றாது நிர்மாண நடவடிக்கைகளை கைவிட்டிருந்ததுடன் மொத்தமாக ரூபா 82,700,000 தொகையான பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட 90 நலன்பெறுனர்கள் பிரதிபலன்களைப் பெற்றுக்கொண்ட கட்டத்திற்குரிய செயற்பாடுகளை மாத்திரம் நிறைவேற்றி நிர்மாண நடவடிக்கைகளை கைவிட்டிருந்தனர். | வேலைகளை கைவிட்டமை, கூடுதல் ஆபத்து காணப்படுகினற வீடுகளை உடைத்து அகற்ற வேண்டியிருந்ததன் அடிப்படையில் நான்காவது தவணைப் பணத்தை பெற்றுக்கொண்டிருக்காமை மூலப் பொருட்களின் விலை அதிகரித்துச் செல்லலின் காரணத்தால் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை முதலியன இதற்கான காரணமாக உள்ளது. | வேண்டும். |
| (இ) | பாதுகாப்பான இடங்களில் மீளக்குடியமர்த்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஒரு வீட:டுடன் ஒரு காணியை கொள்வனவு செய்வதற்காக மொத்தமாக ரூபா 9,600,000 பிரதிபலனைப் பெற்றுக்கொண்ட 06 நபர்களினால் அப்பணத்தினைப் பயன்படுத்தி காணி கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நலனாளி வெளிநாடு சென்றிருத்தல், உடன்படிக்கைகுரிய வீட்டினை கொள்வனவு செய்யாமை, காணியை தனிமைப்படுத்துதல், காணிப் பிரச்சினையின் காரணமாக கொள்வனவு செய்யாமை, காணியை கொள்வனவு செய்யாது தந்தைக்குச் சொந்தமான காணியில் ஒரு வீட்டினை நிர்மாணித்தல் முதலியன இதற்கு காரணமாக உள்ளன. | பிரதிபலன் உரிய செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்படுகின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலுடன் பொறுப்புக்கூறும் நடைமறை அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | 2023 வழங்கல் ஆண்டிற்காக முப்படைகளின் 151,429 முகாம் உறுப்பினர்களுக்கு சமைக்காத மற்றும் உலர் உணவுகரளை வழங்குவதற்காக அமைச்சினால் ரூபா 96 பில்லியன் செலவு மதிப்பீட்டின் அடிப்படையில் கேள்வி வழங்கப்பட்டடிருந்ததுடன் முப்படைகளால் இந்த உணவு | மதிப்பீட்டின் பிரகாரம் ஒரு நபரிடமிருந்து வருடாந்த அரிசி தேவைப்பாடு 181.480 கிலோ கிராம்களாக இருந்த போதிலும் 37.820 கிலோகிராம் மிகையாக அரிசி தேவைப்பாட்டினை தயாரித்தலின் மூலம் இராணுவப் படை | முன்னைய ஆண்டுகளின் உள்ளபடியான பயன்பாட்டினை கருத்தில் கொண்டு நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

மதிப்பீட்டினைத் தயாரித்தல் தொடர்பாக ஒத்த மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டிருககாததுடன் பல்வேறு அடிப்படைகளில் உணவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. இலங்கை இராணுவப் படையிலுள்ள ஒரு நபரின் நாளாந்த அரிசித் தேவைப்பாடு 190 கிராம்களாக ஒரு நியம அளவு பேணப்பட்டிருந்தும் மதிப்பீட்டினைத் தயாரிக்கும் பொது 633 கிராம்களாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒரு கடற்படை அங்கத்தவரின் ஒரு நாள் உணவுத் தேவைப்பாடு அரிசி, தானியம், மரக்கறி, இறைச்சி, மீன் மற்றும் கருவாடு உள்ளடங்கலாக 140 உணவு வகைகளின் 27 கிலோகிராம் 590 கிராம் என நடைமுறைச் சாத்தியமற்ற மற்றும் மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

வீரர்களுக்கு தொடர்ச்சியாக உணவு வழங்கலினை மேற்கொள்ள கூடியதாக இருந்ததுடன் கொழும்பு பிரதேசத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள உள்ளக பாதுகாப்பு, பிரபுக்கள் பாதுகாப்பு கடமை, விழாக்கள், ஆர்ப்பாட்டங்கள் ஏனைய கடமை நிலைமைகள் மற்றும் படைகளில் வசிக்க வேண்டி ஏற்படுவதனை கருத்தில் கொண்டு மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) முப்படைகளின் அங்கத்தவர்களுக்கு உணவு வழங்குவதற்குரிய கேட்பு மனுக்களை மதிப்பீடு செய்யும் போது உணவுப் பொருட்களுக்காக நியாயமான விலையைத் திர்மானித்:து அந்த விலைகளின் மீது 10 சதவீதம் உச்ச அளவாகும் வகையில் நாட்டிலுள்ள ஏதேனுமொரு முகாமிற்கு வழங்குவதற்கான உச்ச விலை, தீர்மானிக்கப்படுகின்றது எனவும் அதற்காக ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் புள்ளவிபரத் திணைக்களத்தினால் சேகரிப்பட்ட விலைகள் தொடர்பான தரவுகளும் முப்படைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற விலைப்பகுப்பாய்வும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டது என

ஆகக் குறைந்த கேள்விப் பெறுமதியைச் சமர்ப்பித்தவர்கள் மாத்திரம் ஒப்பந்தத்தை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்படாததுடன் அந்த விலைகளை சந்தையில் காணப்படுகின்ற விலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது நியாயமானதா என்பதும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் விலைகளானது கலந்துரையாடலின் மூலம் ஆகக் குறைந்த கேள்விதாரரின் நியாயமான பெறுமதி வரை குறைப்பதற்கு முடியுமான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். எனினும்

அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த கிரயம் ஏற்படும் வகையில் மற்றும் உச்ச அளவு நலன் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. அடையாளங்காணப்பட்ட நியாயமான சந்தை விலையை விட 22 சதவீதத்திலிருந்து 103 சதவீதம் வரையான அதிக விலைக்கு கொழும்பு மற்றும் அண்மித்த பிரதேசங்களிலுள்ள 05 முகாம்களுக்கு அரிசி வகைகளை வழங்குவதற்கு கேள்விகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த 05 முகாம்களுக்கான பருப்பு, கருவாடு மற்றும் பால்மாவினை வழங்குதல் அடையாளங்காணப்பட்ட நியாயமான சந்தை விலையினை விட 42 சதவீதத்திலிருந்து 102 சதவீதம் வரையான அதிக விலைக்கு கேள்விகள் வழங்கப்பட்டிருந்தன. | அமைச்சு ஒப்படைக்கின்ற விலையின் ீழ் வழங்குவதற்கு வழங்குனர்கள் இணங்கி கொள்ளாததுடன் அவ்வாறான விலை ஒப்படைப்பினை மேற்கொள்வதற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையில் ஏற்பாடுகள் இல்லை. அதற்கிணங்க தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நிர்ணயித்த அந்த விலைக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கான இயலுமை இல்லை. | |
| (இ) | பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 876.84 மில்லியன் ஆன 03 கட்டிடங்களின் தளம் மற்றும் பொருள் அறை மேற்பரப்பிற்கு கிரைனைட் டயில் வழங்கி பொருத்தும் செயற்பாடானது 03 பெறுகைச் செயற்பாடுகளாக வகுதியாக்கப்பட்டு கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் அந்த மூன்று ஒப்பந்தங்களும் ஒரு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.12 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்விதாரரின் நிதி, தொழில்நுட்பம், உற்பத்தி, செயலாற்றல் நியமங்கள் தொடர்பான முன்னைய தகமைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 927.66 மில்லியன் தொகையான மூன்று ஒப்பந்த செயற்பாடுகளையும் ஒரே தடவையில் நிறைவேற்றுவதற்காக கேள்விதாரரின் தொழில்நுட்ப, நிதி மற்றும் மனிதவளங்கள், உபகரண இயலளவுகள் மற்றும் | தனித் தனியாக செயற்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலம் இறுதி பொறுப்பக்கூறலினை ஒப்படைத்தலும் பேணுதலும் இலகு இலகுவாக இருத்தல், ஒப்பந்தத்தை முகாமைத்துவம் செய்யும் போது ஏற்படுகின்ற சிரமங்களையும் சிக்கல்களையும் குறைத்தல், மத்திய அளவிலான ஒப்பந்தக்காரர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல், அதிக போட்டிகளை உருவாக்குதல், செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றத்தினை தனித்தனியாக மதிப்பீடு செய்யக்கூடியதாக இருத்தல், வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் நிதி ஏற்பாட்டினை விட குறைந்த நிதி எற்பாடு கிடைத்தல், இடம் அமர்த்தும் முன்னுரிமைகள் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.12 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்விதாரர்களின் நிதி தொழில்நுட்ப உற்பத்தி செயலாற்றல் நியமங்கள் தொடர்பான முன்னைய தகமைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயலுமைகள் தொடர்பாக முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அங்கீகரித்த ஒப்பந்த காலத்தினைப் போல மூன்று மடங்கிற்கு அதிகமான 04 கால நீடிப்புச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வேலை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | மாற்றமடைதல் ஆகிய விடயங்களை காரணமாகக் கொண்டு கட்டிடங்களுக்காக தனித்தனியாக ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டது. ஒரே ஒப்பந்தக்காரருக்கு சில ஒப்பந்தங்களை சமாந்தரமாக மேற்கொள்ள முடியுமா என்பதனைப் பரீட்சித்தல் பாதகாப்பு அமைச்சின் ஆலோசனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | |
| (ஈ) | பாதுகாப்பு தலைமையகத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் இலக்கம் 03 மற்றும் 04 ஆம் கட்டிடங்களுக்காக குறைந்த வோல்ட்ஸ் இலக்ட்ரோனிக் முறைமையை உருவாக்கி வழங்கி பொருத்தும் செயற்பாடானது இரண்டு ஒப்பந்த செயற்பாடாக கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் அந்த இரண்டு ஒப்பந்தங்களும் ஒரு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.12 ஆம் பிரிவின் பிரகாரம் சில ஒப்பந்தங்களை ஒரே தடவையில் நிறைவேற்றுவதற்காக கேள்விதாரரின் தொழில்நுட்ப, நிதி மற்றும் மனிதவளங்கள் இயலுமையினை மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் இணங்கி கொண்ட முழு ஒப்பந்த பெறுமதி ரூபா 642 மில்லியனான வழங்கல் சேவைகளை ஒரே தடவையில் நிறைவேற்றுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாருக்கு அத்தியவசியமான வள இயலளவு (நிதி, தொழில்நுட்பம், உற்பத்தி, செயலாற்றல், நியமங்கள்) காணப்படுகின்றதா என்பது தொடர்பாக முன்னைய | ஒரு விடயத்தின் கீழ் சில ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தல் ஒப்பந்தத்தினை வழங்குவதற்கு முன்னர் ஒரே ஒப்பந்தக்காரருக்கு சில ஒப்பந்தங்களை சமாந்தரமாக மேற்கொள்ள முடியுமா என்பதனை பரீட்சிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ரூபா 927.66 மில்லியன் ஒப்பந்த செயற்பாடுகளை ஒரே தடவையில் நிறைவேற்றுவதற்காகவும் எதிர்பார்த்த காலப் பகுதிக்குள் பூர்த்திசெய்வதற்காகவும் ஒப்பந்தகாரரின் காணப்படுகின்ற தொழில்நுட்ப மற்றும் வள இயலுமை தொடர்பாக முறைப்படியாக மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். , |

தகமைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சில் 118 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அவற்றில் 28 பதவிகள் சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளாகும். இந்நிலைமையானது அமைச்சின் செயலாற்றலினை அதிகரிக்கச் செய்யும் போது ஒரு தடையாக அமைந்திருந்தது. | அமைச்சில் வெற்றிடங்கள் காணப்படுகின்ற ஒருங்கிணைந்த சேவைகளில் மற்றும் நாடளாவிய சேவைகளில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவது சம்பந்தமாக அரசாங்க நிருவாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் பல வேண்டுதல்கள் விடுக்கப்பட்டுள்ளன. | எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்துகொள்வதற்காக போதியளவு ஆளணியை பேணுதல் வேண்டும். |
| (ஆ) | 4/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் உள்ளபடியான ஆளணித் தகவல்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மேற்கூறிய சுற்றறிக்கைக்கு இணங்க அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு 2023 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டு தொடர்பாக நாளதுவரையாக்கிய ஆளணித் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் தாமதமின்றி அனுப்பிவைக்கப்படும் என மேலும் தெரிவிக்கிறேன். | 4/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |